2019

වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

Annual Performance Report

ජාතික ලේඛනාරක්ෂක දෙපාර්තමේන්තුව

தேசிய சுவடிகூடத் திணைக்களம

Department of National Archives

2019

වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

வருடாந்த செயல்திறன் அறிக்கை

Annual Performance Report

ජාතික ලේඛනාරක්ෂක දෙපාර්තමේන්තුව, අංක 07, පිලිප් ගුණවර්ධන මාවත, කොළඹ 07

தேசிய சுவடிக்கூடத் திணைக்களம், இல.07. பிலிப் குணவர்தன

மாவத்தை, கொழும்பு 07

Department of National Archives, No 07, Philip Gunawardana Mawatha, Colombo 07.

2019 ஆம் ஆண்டிற்கான
வருடாந்த செயலாற்றுகை
அறிக்கை

தேசிய சுவடிகள் காப்பக
திணைக்களம்

செலவீனத் தலைப்பு இலக்கம் - 209

	உள்ளடக்கம்	பக்க இலக்கம்
	01 அத்தியாயம் - நிறுவன விபரத் திரட்டு	***01***
1.1	*அறிமுகம்*	*01*
1.2	*தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கமும் சட்டமும்*	*02*
1.2.1	*தொலைநோக்கு*	*02*
1.2.2	*பணிக்கூற்று*	*02*
1.2.3	*நோக்கமும் பணிகளும்*	*02*
1.2.4	*பிரமாணங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் சுற்றறிக்கை*	*03*
1.3	*பிரதான சேவைகள்*	*04*
1.4	*நிறுவனக் கட்டமைப்பு*	*04*
1.5	*பிரதான பிரிவுகள்*	*04*
1.5.1	*பொது மக்கள் தொடர்பாடல் பிரிவு*	*04*
1.5.2	*ஆராய்ச்சி அறை*	*05*
1.5.3	*புத்தகங்கள் மற்றும் செய்தத்தாள்களை பதிவு செய்யும் பிரிவு*	*05*
1.5.4	*நிழற்படப் பிரிவு*	*06*
1.5.5	*செவிப்புல கட்புலப் பிரிவு*	*06*
1.5.6	*தொழில்நுட்பப் பிரிவு*	*06*
1.5.7	*நூலகம்*	*07*
1.5.8	*களஞ்சியசாலை*	*07*
1.5.9	*டைம்ஸ் சேகரிப்பும் ஹொரகொல்ல நூலகமும்*	*07*
1.5.10	*நிர்வாகப் பிரிவு*	*08*
1.5.11	*கணக்குப் பிரிவு*	*08*
1.5.12	*கணனிப் பிரிவு*	*08*
1.5.13	*கண்டி கிளை*	*09*
	02 அத்தியாயம் -முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு	***10***
2.1	*விசேட திட்டங்கள் மற்றும் அடைவுகள்*	*10*
2.2	*எதிர்கால இலக்குகள்*	*19*
2.3	*சவால்கள்*	*21*
	03 அத்தியாயம்ய - ஆண்டின் ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை	***23***
3.1	*நிதிச் செயலாற்றுகைக் கூற்று*	*23*
3.3	*நிதி நிலைமை தொடர்பான அறிக்கை*	*24*
3.4	*காசுப் பாய்ச்சல் தொடர்பான அறிக்கை*	*25*
3.5	*நிதி அறிக்கை குறிப்புகள்*	*26*
3.6	*வருமானச் சேகரிப்பு தொடர்பான செயலாற்றுகை*	*26*
3.7	*ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது தொடர்பான செயலாற்றுகை*	*26*
3.8	*நிதி ஒழுங்கு விதியின் 208 இன் பிரகாரம் , ஏனைய அமைச்சுகள் / திணைக்களங்களின் பிரதிநிதியொருவராக இத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்*	*26*
3.9	*நிதி அல்லாத சொத்து அறிக்கையிடலின் செயலாற்றுகை*	*27*
3.10	*கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை*	*27*
	04 அத்தியாயம்ய–செயல்திறன் குறிகாட்டிகள்	***28***
4.1	*செயலாற்றுகைக் குறிகாட்டி (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் அமைந்த)*	*28*
	05 அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகை	***29***
5.1	*அடையாளப்படுத்தப்பட்ட குறித்த நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையிலமைந்த வெற்றி மற்றும் சவால்கள்*	*29*

5.2	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையிலமைந்த வெற்றிகளும் சவால்களும்	31
	06 அத்தியாயம் - மனித வளம் தொடர்பான விபரத் திரட்டு	**32**
6.1	ஆளனி முகாமைத்துவம்	32
6.2	நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகையில் தாக்கம் செலுத்தியுள்ள விதம்	32
6.3	மனித வள அபிவிருத்தி	33
6.4	நிறுவனத்தின் செயலாற்றுகைக்கான பயிற்சித் திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்யும் விதம்	37
	07 அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை	**38**

1. நிறுவன விபரத் திரட்டு

1.1 அறிமுகம்

இலங்கையில் ஆவண முகாமைத்துவப் பாரம்பரியம் மன்னர்களின் ஆட்சிக்காலம் வரையிலான நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. இருப்பினும், மன்னர்களின் அரச பதிவுகள் மற்றும் ஆவணங்கள் பல்வேறு படையெடுப்புக்களால் அழிக்கப்பட்டன. பதினாறாம் நூற்றாண்டிலிருந்தே நாட்டின் கரையோர பிரதேசத்தை 1638 ஆம் ஆண்டு வரை போர்த்துக்கீசர் ஆட்சி செய்தார்கள் அதற்குப் பின்னர் அப்பிரதேசங்களை ஒல்லாந்தர்களால் இருபது வருடங்களினுள் கைப்பற்றிக் கொண்டார்கள். இந்த யுத்தத்தில் போர்த்துக்கீசர் அவர்களின் பல சுவடிகளை அழித்து விட்டனர். என்றாலும், 1976 ஆம் ஆண்டில் பிரித்தானியர்களினால் மிகவும் அமைதியான முறையில் கரையோரப் பிரதேசங்கள் கைப்பற்றப்பட்ட போது ஒல்லாந்தர் நிர்வாகத்தினால் வடிவமைக்கப்பட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

அதற்கமைய, போர்த்துக்கீசர் நிர்வாகக் காலப்பிரிவில் உருவாக்கப்பட்ட அசல் ஆவணங்கள் எதுவும் இலங்கையின் தேசிய சுவடிகள் காப்பகத்தில் இல்லை என்பதோடு அவ்வாவணங்கள் லிஸ்பன் மற்றும் கோவா போன்ற நகரங்களில் காணலாம். இருப்பினும், ஒல்லாந்தர்களின் 7000 இற்கும் மேற்பட்ட ஆவணங்கள் தொகுதிகளாக பல வருடங்கள் பாதுகாக்கப்பட்டு வந்தன. பிரித்தானிய காலனித்துவ நிர்வாகக் காலப்பகுதியில் ஆவணக் காப்பகத்தின் பொறுப்பு காலனித்துவச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 1803 ஆம் ஆண்டில் அப்பதவிக்கு "ஒல்லாந்தர் சுவடிகள் நம்பிக்கைப் பெறுப்பாளர்" பதவி எனப் பெயரிடப்பட்டது. 1901 ஆம் ஆண்டில் தலைமைச் செயலகத்துடன் ஒன்றிணைந்த உத்தியோகபூர்வ பதவியொன்றாக "அரச சுவடிகள் காப்பகர்" என்ற பதவியொன்று ஏற்படுத்தப்பட்டது. இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கும் வரை நம்பிக்கைப் பொறுப்பு பிரித்தானிய நிர்வாகத்துக்குரிய காலனித்துவ செயலாளரின் விடயப் பரப்பின் கீழ் சுவடிகள் காப்பகம் காணப்பட்டது.

1947 ஆம் ஆண்டில் அரச சுவடிகள் காப்பக திணைக்களம் உருவாகியதுடன் பின்னர் இந்நிறுவனம் தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம் அல்லது தேசிய சுவடிகள் காப்பகம் என பெயரிடப்பட்டது. நிறுவனத்தின் பிரதான பதவிப் பெயராக இருந்த "சுவடிகள் காப்பாளர்" என்பது " பணிப்பாளர்" என 1966 ஆம் ஆண்டில் மாற்றம் பெற்றது. 2017 ஆம் ஆண்டில் திணைக்களத்தினை மீள்கட்டமைப்புச் செய்யப்பட்டதன் பின்னர் அப்பதவி "தேசிய சுவடிகள் கூட பணிப்பாளர் நாயகம்" என அப்பதவி மாற்றமடைந்தது.

1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க தேசிய சுவடிகள் காப்பகச் சட்டம் 1981 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சுவடிகள் காப்பக (திருத்தச்) சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தேசிய சுவடிகள் காப்பம் வீடமைப்பு, கட்டுமான மற்றும்

கலாசார அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் இருந்ததோடு, அது நவம்பர் மாதம் முதல் புத்தசாசனம், கலாசாரம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது.

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம் தேசத்தின் நினைவுக் குறிப்புகளை பாதுகாத்துக் கொள்கின்ற அறிவுக் களஞ்சியமாகவும், பொது மக்களுக்கான தகவல் மையமாகவும் கல்வி நிலையமாகவும் தனது சேவையை வழங்கி வருகின்றது.

1.2 தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கமும் சட்டமும்

1.2.1 தொலைநோக்கு

தேசத்தின் அடையாளம், பொறுப்புடைமை மற்றும் ஞாபகச் சின்னங்களைப் பேணுகின்ற ஆவணப் பாரம்பரியத்தின் வினைத்திறனான முகாமைத்துவமும் பாதுகாப்பும்

1.2.2 பணிக்கூற்று

பொது நிறுவனங்களின் சான்றாவணங்களை முறையாக முகாமை செய்வதுடன் தேசத்தின் வரலாறு மற்றும் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் தனிப்பட்ட ஆவணங்களையும் பாதுகாத்தல்

1.2.3 நோக்கமும் பணிகளும்

1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க தேசிய சுவடிகள் காப்பகச் சட்டத்தின் பிரகாரமும் 981 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சுவடிகள் காப்பக (திருத்தச்) சட்டத்தின் பிரகாரமும் நோக்கங்களும் பணிகளும் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

- அரச சுவடிகளின் பொறுப்பை வகித்தலும் அவற்றின் பௌதீக நிலையைப் பாதுகாத்தலும்
- ஆய்வு மற்றும் விசாரணை நடவடிக்கைகளுக்காக அவற்றை வழங்குதல்
- அரச நிறுவனங்களின் ஆவணங்களை தேசிய சுவடிகள் காப்பகத்துக்கு ஒப்படைத்தல் மற்றும் பதிவழித்தல் தொடர்பான அட்டவணையை அங்கீகரித்தல்.
- அரச நிறுவனங்களின் சுவடிகளை ஆய்வு செய்தல்
- சனாதிபதியின் சுவடிகள் காப்பகத்தை நிர்வகித்தல் மற்றும் புலனாய்வுச் சேவை
- இந்நாட்டில் வெளியிடப்படுகின்ற வெளியீடுகளின் சட்டரீதியான சேமிப்புக்களின் களஞ்சியமாக செயலாற்றல்
- சுவடிகள் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி செயலமர்வுகளை நடத்தல்
- அச்சகங்கள், அச்சிடுவோர், வெளியிடுவோர் மற்றும் செய்தித்தாள் தொடர்பான கட்டளைச் சட்டங்களை அமுலாக்கல்
- தனிப்பட்ட சுவடிகளின் தொகுப்பை பாதுகாத்தல் மற்றும் பெயர்ப் பட்டியலிடல்
- இந்த நாட்டில் உள்ள அனைத்து வரலாற்று ஆவணங்களின் விவரங்களையும் உரிமையையும் ஆவணப்படுத்துதல்

1.2.4 பிரமாணங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் சுற்றறிக்கை

- 1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க தேசிய சுவடிகள் காப்பகச் சட்டம்
- 1981 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சுவடிகள் காப்பக (திருத்தச்) சட்டம்
- 1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க தேசிய சுவடிகள் காப்பகச் சட்டத்தின் கீழ் நடைமுறையில் உள்ள கட்டளைச் சட்டம்
  - 1902 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க அச்சக கட்டளைச் சட்டம் (178 ஆம் அதிகாரசபை) மற்றும் அதற்கான திருத்தம்
  - 1885 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அச்சிடுவோர் மற்றும் வெளியீட்டாளர் தொடர்பான கட்டளைச் சட்டம் (179 ஆம் அதிகாரசபை) மற்றும் அதன் திருத்தம்.
  - 1939 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க செய்தித்தாள் கட்டளைச் சட்டம் (179 ஆம் அதிகாரசபை) மற்றும் அதன் திருத்தம்.
- அரச சுவடிகளுக்கான பொது அணுகுமுறை
  - 1978.12.15 ஆந் திகதி 15 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகை.
- ஆணைக்குழுச் சுவடிகளுக்கான பொது அணுகுமுறை
  - 1980.02.01 ஆந் திகதி 74 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகை.
- நீதிமன்ற சுவடிகளை அகற்றுவதற்கான அணுகுமுறை.
  - 1979.01.26 ஆந் திகதி 21 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகை.
- கச்சேரி சுவடிகளை அகற்றுவதற்கான விதிமுறைகள்.
  - 1980.07.25 ஆந் திகதி 99 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகை.
- அரச நிறுவனங்களில் வாலாயம் எனும் சில நாட்கள் மட்டும் பயன்படுத்துகின்ற சுவடிகளை அகற்றுவதற்கான விதிமுறைகள்.
  - 1984.08.31 ஆந் திகதி 31 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகை.
- அரச சுவடிகளை அகற்றுவது தொடர்பான நிர்வாகம் விதிமுறைகள்.
  - தாபன விதிக்கோவையின் 28 ஆம் அத்தியாயத்தின் 9:1 தொடக்கம் 9:8 வரை பிரிவுகள்.
- அரச சுவடிகளை அட்டவணைப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான சுற்றறிக்கை.
  - அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை :18/2008 - 2008.12.17ஆந் திகதி.
  - அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 08/2017- 2017.03.29 ஆந் திகதி.

1.3 பிரதான சேவைகள்

1.3.1 பொது மக்களுக்கு ஆராய்ச்சிக்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் சான்றுப்படுத்தி பிரித்தெடுப்புக்களை வழங்குதல்.

1.3.2 அரச நிறுவனங்களுக்கும் பிற நிறுவனங்களுக்கும் நிர்வாக மற்றும் வரலாற்று ரீதியான தகவல்களை வழங்குதல்.

1.3.3 நுண் நிழற்பிரதியாக்கல் மற்றும் வருடிப் பிரதிகள், எண்வரிசைப்படுத்தல் மூலம் புகைப்படமெடுத்தல் போன்ற மறுபடி எடுப்புப் பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கான வசதி வாய்ப்புக்களை வழங்குதல்.

1.3.4 ஆவண முகாமைத்துவம் மற்றும் சுவடிகள் காப்பக நிர்வாகம் தொடர்பாக அரச மற்றும் தனியார்த் துறையினருக்கு ஆலோசனை வழங்குதல்.

1.3.5 பாடசாலையில் சுவடிகள் கூடம் அமைப்பது தொடர்பான ஆலோசனை வழங்குதல்.

1.3.6 ஜே.ஆர். ஜயவர்தன ஆய்வு நிலையத்தின் தொழில்சார் நடவடிக்கைகளுக்கான ஆலோசனை வழங்குதல்.

1.3.7 அரச மற்றும் தனியார் துறையினரின் சுவடிகள் காப்பம் தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.

1.3.8 வரலாற்று ரீதியான சுவடிகள் தொடர்பாக கண்காட்சிகளை நடாத்தல் மற்றும் ஒழுங்கு செய்தல்.

1.3.9 அழைப்பாணைப் பத்திரங்களுக்கு ஏற்ப நீதிமன்றங்களுக்கு பதிவேடுகளைச் சமர்ப்பித்தல் மற்றும் அது குறித்து சாட்சியமளித்தல்.

1.3.10 இலங்கையின் வரலாறு தொடர்பான ஆய்வுகளை நடாத்தல்.

1.3.11 இந்நாட்டு வரலாற்று ஆவணங்களை வேறு நாடுகளுக்கு கொண்டு செல்வதற்கு உத்தவுப் பத்திரங்களை வழங்குதல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு

தயவுடன் இணைப்பு 01 இனைப் பார்க்கவும்.

1.5 பிரதான பிரிவுகள்

1.5.1 பொது மக்கள் தொடர்பாடல் பிரிவு

பொது மக்களுக்கான தொழில்சார் சேவை தொடர்புகளை முதன்மையாக பேணிச் செல்வது இப்பிரிவின் மூலமாகும். பிரித்தெடுப்புப் பாகப் பிரதிகளை சான்றுப்படுத்தல், அழைப்பாணையின் அடிப்படையில் நீதிமன்றத்துக்கு பதிவேடுகளின் பிரித்தெடுப்பு தொடர்பாக சாட்சியமளிக்கும் நடவடிக்கைக்கு ஒருங்கிணைப்புச் செய்தல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப ஆவணங்களில் இருந்து தகவல்களை தேடும் நடவடிக்கையைப் பொறுப்பேற்றல் மற்றம் அவற்றின் பிரித்தெடுப்புப் பாகங்களை வழங்குதல், ஆய்வாளர்களுக்கு வாசிப்புக்கான அனுமதி அட்டைகளை வழங்கல்,

ஆய்வுகளின் தேவைகளுக்கு ஏற்ப உரிய விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு ஆவணங்களின் பிரித்தெடுப்புக்களை வழங்குதல் போன்ற பணிகள் இப்பிரிவின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது.

அதன்போது பொது மக்கள், அரச மற்றும் அரச சார்பு நிறுவனங்களின் தேவைப்பாட்டுக்கு ஏற்ப ஒல்லாந்தர் விபரத் திரட்டு, வாக்காளர் இடாப்பு, அரசாங்க வர்த்தமானி, செய்தித்தாள்கள், \அரசாங்க முத்திரையிடப்பட்ட பத்திரங்கள், பிறப்பு, இறப்பு, விவாகம் தொடர்பான தகவல்கள், காணி மீட்டல் பதிவேடுகள், தானிய குத்தகை ஒப்பந்தப் பதிவேடு, விஹாரை, தேவாலகம் தொடர்பான பதிவேடு, சேவை அனுபவப் பதிவேடு போன்றவற்றின் சான்றுப் பிரதிகளை வழங்குவதோடு, வெளியீடுகள் மற்றும் வெகுசன ஊடகச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய பல்வேறு சான்றுப் பிரதிகளையும் வழங்குதல்.

1.5.2 ஆராய்ச்சி அறை

ஆய்வு நடவடிக்கைகளுக்காக வருகை தரும் வாசகர்களுக்கு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கத் தேவையான வசதிகள் இப்பிரிவினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. சுவடிகள் வகுதிகளான தேடல் பிரித்தெடுப்பு, சுருக்கம் மற்றும் பொழிப்பு, சூசிகை மற்றும் வேறு பட்டியல்களும் இங்கு காணப்படுகின்றன. தேசிய சுவடிகள் கூடத்தினால் செயற்படுத்தப்படும் திட்டத்தின் கீழ் எண்தொகுப்பு செய்யப்பட்டு தரவுத் தளத்தில் உள்ளீடு செய்யப்பட்டுள்ள டைம்ஸ் பத்திரிகை நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நிழற்படங்கள் மற்றும் பத்திரிகைகளில் இருந்து வெட்டியெடுக்கப்பட்ட துண்டுகளின் தொகுப்பான டைம்ஸ் திரட்டினை பரீட்சிப்பிற்காக ஆராய்ச்சி அறையிலிருந்து வாசகர்களுக்கு பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

1.5.3 நூல்கள் மற்றும் செய்தித்தாள்களைப் பதிவுசெய்யும் பிரிவு

அச்சகங்களை பதிவு செய்தல், பதிவு செய்யப்படுள்ள அச்சகங்களில் அச்சிடப்பட்ட வெளியீடுகள், சஞ்சிகைகள், பத்திரிகைகளைப் பதிவு செய்தல் மற்றும் அதற்குரித்தான பதிவேடுகளை இற்றைப்படுத்துவதனைப் போன்றே பதிவு செய்யப்படாத வெளியீடுகளை தேடுவதற்காக புத்தக நிலையங்களைப் பரீட்சித்தல், அச்சகங்களைப் பரீட்சித்தல், அச்சிடப்பட்ட பொருட்கள் மற்றும் மாதாந்த வெளியீட்டுப் பத்திரங்களை அனுப்பாத அச்சகங்களுக்கு எதிராக வழக்குத் தொடரல் போன்ற பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- சட்டரீதியான வைப்புக்கள்

  நாட்டில் வெளியிடப்படுகின்ற செய்தித்தாள்கள் மற்றும் வெளியீடுகளை திரட்டும் செயற்பாட்டுக்கு இப்பிரிவு பொறுப்பாகும்.

- அச்சகங்களை பதிவு செய்தல் மற்றும் நிர்வாகித்தல்

அச்சகங்கள் தொடர்பான கட்டளைச் சட்டம் மற்றும் அச்சிடும் களைஞர்களின் கட்டளைச் சட்டங்களுக்கு ஏற்ப அச்சங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். அச்சகங்களை பதிவு செய்தல், அச்சகங்களை மூடுதல், அச்சகங்களை சோதனையிடல், அச்சங்களின் பெயர்ப் பட்டியலை இற்றைப்படுத்தி அச்சிடல், அச்சகங்களுக்கு எதிராக வழக்குத் தொடரல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

1.5.4 நிழற்படப் பிரிவு

இப்பிரிவினால் திணைக்களத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள பௌதீக ரீதியிலான பலவீனமடைந்துள்ள ஆவணங்கள் மற்றும் ஏனைய அத்தியவசியப்படும் சுவடிகளை நுண் திரைப்படமாக்கல் மேற்கொள்ளப்படும். இதற்கு மேலதிகமாக திணைக்களத்தின் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நிழற்படமெடுத்தல் நடவடிக்கையினை இப்பிரிவு மேற்கொள்கின்றது. மேலும், பொது மக்களின் தேவைப்பாட்டுக்கு ஏற்ப டிஜிட்டல் கெமராவினைப் பயன்படுத்தி பல்வேறு சுவடிகளின் பிரித்தெடுப்புக்கள் இப்பிரிவினால் எடுக்கப்படும்.

1.5.5 செவிப்புல கட்புலப் பிரிவு

திரைப்படங்கள், வீடியோ படங்கள், இலத்திரனியல் காந்த நாடாக்கள், செவிப்புல ஒலிப்பதிவு நாடாக்கள், இறுவட்டுக்கள், இணைப்பாக்கம் செய்யப்பட்ட இறுவட்டுக்கள், புகைப்படங்கள், சறுக்குப் படங்கள் மற்றும் நுண் திரைப்படங்கள் போன்ற கட்புல செவிப்புல பதிவேடுகள் இப்பிரிவில் வைக்கப்பட்டுள்ளன.நுண் திரைப்படங்களைப் பரீட்சித்தல் மற்றும் ஆய்வாளர்களுக்காக ஆய்வு அறைக்கு விநியோகித்தல் என்பன இப்பிரிவினால் இடம்பெறுகின்றன. திணைக்களத்தில் உள்ள மிக அரிய நாட்டுப்பாடல் இசைத்தட்டுகளை ஆய்வாளர்கள் கேட்பதற்கு வசதிகள் செய்து கொடுத்தல், பிரதிகளை வழங்குதல் மற்றும் நுண் திரைப்படங்களின் பிரதிகளை வழங்குதல் மற்றும் கட்புல செவிப்புல உபகரணங்களைப் பராமரித்தல் ஆகிய பணிகள் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று, திரைப்படங்களைக் கொண்ட சுவடிகள் காப்பகத்தில் உள்ள திரைப்படங்களின் விருதுகளின் தரங்களுக்கு ஏற்ப பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பினை மேற்கொள்ளும் பொறுப்பும் இப்பிரிவிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

1.5.6 தொழில்நுட்பப் பிரிவு

திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேடுகளை பேணிக்காத்தல் *(preservation),* பாதுகாத்தல் *(conservation)* மற்றும் மீள்நிலைப்படுத்தல் *(restoration)* போன்ற நடவடிக்கைகள் தொழில்நுட்பப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், அரச நிறுவனங்கள், அரச சார்பு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களின் பதிவேடுகள் மற்றும் மத ஸ்தளங்களின்

பதிவேடுகளைப் பேணிக்காத்தல், பாதுகாத்தல் மற்றும் மீள்நிலைப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பாக அவசியப்படும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கல், பதிவேட்டுப் பாதுகாப்பு தொடர்பான ஆய்வுகளை நடாத்தும் பணியும் இப்பிரிவினால் இடம்பெறுகின்றன. புத்தகம் கட்டுநர்களுக்கான பயிற்சியளிக்கும் பாடநெறியை நடாத்தல் மற்றும் ஏட்டுச் சுவடிகளை பாதுகாப்பது தொடர்பான செயலமர்வுகளை இப்பிரிவு நடாத்தி வருகின்றன.

1.5.7 நூலகம்

சுவடியியல் மற்றும் நாட்டின் வரலாறு தொடர்பான அரிதான புத்தங்கள் திணைக்களத்தின் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக, அரசியல், விஞ்ஞானம், சமூகவியல், சுயசரிதைகள், கலாசாரம், மானிடவியல், சட்டம் வெளிநாட்டுத் தொடர்புகள், இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளுடன் தொடர்புடைய எழுதப்பட்ட புத்தகங்களும் சஞ்சிகைகளும் இந்நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இதனை மூல ஆவணங்களின் ஆய்வு நடவடிக்கைகளின் போது அவசியப்படும் இரண்டாம் நிலை ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்காகவும், திணைக்கள உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்காகவும் பராமரிக்கப்பட்டு வரும் நூலகமாக விளங்குகின்றது.

1.5.8 களஞ்சியசாலை

திணைக்களத்தின் 6 களஞ்சியங்களில் வரிசையில் வைக்கப்பட்டால் சுமார் 23.5 கி.மீ. தூரம் செல்லக்கூடிய மிகப் பெறுமதியானதும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததுமான பதிவேடுகள் வைப்பிலிடப்பட்டுள்ளன. அத்தகைய சுவடிகளின் முதற் தொகுதி கி.பி. 1640-1796 இற்கிடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தை நிர்வாகம் செய்த ஒல்லாந்தர் வர்த்தக நிறுவனத்தின் புழக்கத்திலிருந்த பதிவேடுகள் உள்ளடக்கப்படுகின்றன. ஏனைய பதிவேடுகளாக 1796 முதல் 1948 ஆம் ஆண்டு வரைக் காணப்பட்ட பிரித்தானிய ஆட்சிக் காலத்துப் பதிவேடுகளும், 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் பதிவேடுகளும் வரலாற்று கையெழுத்து ஆணையத்தினால் திரட்டப்பட்ட பதிவேடுகளும் தனிப்பட்ட ஆவணங்களின் தொகுப்பும் வரைபடங்களின் தொகுப்பும் இதனுள் அடங்குகின்றன.

1.5.9 டைம்ஸ் சேகரிப்பும் ஹொரகொல்ல நூலகமும்

டைம்ஸ் செய்தித்தாள் நிறுவனத்துக்குச் சொந்தமாக காணப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நபர்களின் மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது எடுக்கப்பட்ட கருப்பு வெள்ளை புகைப்படங்கள் மற்றும் பத்திரிகைகளில் இருந்து வெட்டியெடுக்கப்பட்ட பிரசுரங்களை உள்ளடக்கிய துண்டுகளின் தொகுப்பும் தேசிய சுவடிகள் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இச்சேகரிப்பினை பொது மக்களின் பயன்பாட்டிற்காக

வழங்கப்படுவதோடு அதனை எண்வரிசைப்படுத்தப்பட்ட பிரதிகளை உள்ளடக்கிய தரவுக் களஞ்சிய ஆராய்ச்சி அறையிலிருந்து பயன்பாட்டிற்காக பெற்றுக்கொள்ள முடியும். ஹொரகொல்ல நூலகம் என்பது எஸ். டப்ளியூ. ஆர். டீ. பண்டாரநாயக குடும்பத்தவர்களால் வழங்கப்பட்ட பல்வேறு விடயத் துறையுடன் தொடர்புடைய ஏராளமான நூல்களின் சேர்க்கையாகும். அவ்வாவணங்களை பண்டாரநாயக குடும்பத்தின் அனுமதியுடன் மாத்திரமே பயன்படுத்த முடியும்.

1.5.10 நிர்வாகப் பிரிவு

திணைக்களத்தின் உள்ளக நிர்வாக நடவடிக்கை தொடர்பான பொறுப்பு இப்பிரிவிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. திணைக்கள ரீதியான பதவிகளில் இணைத்துக் கொள்வது தொடக்கம் ஓய்வு பெறச் செய்வது வரையான அனைத்து கடமைகளையும் உத்தியோகத்தர்களின் உள்ளக ஆட்சேர்ப்புக்கள், கடமைகளைப் பகிர்ந்தளித்தல், இடமாற்றங்களைப் போன்றே மனித வள அபிவிருத்திக்காக பயிற்சிப் பாடநெறிகளுக்கு உத்தியோகத்தர்களை பங்குபெறச் செய்தல் போன்ற சகல செயற்பாடுகளும் இப்பிரிவினாலே மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், சுவடிகள் முகாமைத்துவத்திற்காக அவசியப்படும் அமைப்புக்களான நடுத்தர காற்றுப்பதனாக்கத் தொகுதி *(Heating, Ventilation and Airconditioning - HVAC system)*, கட்டிடப் பராமரிப்புத் தொகுதி *(Building Maintenance System - BMS)*, மூடிய சுற்றுகள் தொலைக்காட்சிகள் *(CCTV)* அமைப்பு மற்றும் நீர்க்குழாய் அமைப்பு போன்றவற்றினை மிகச் சிறப்பாக பராமரித்துச் செல்லும் தொழிற்பாடு இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதற்கு மேலதிகமாக, திணைக்களத்தின் செயற்திட்டங்களை திட்டமிடும் பணிகள், மாதாந்த முன்னேற்ற அறிக்கை மற்றும் செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் நிர்வாகப் பிரிவினால் நடைபெறுகின்றது.

1.5.11 கணக்கீட்டுப் பிரிவு

திணைக்களத்தின் அனைத்து கணக்கீட்டு நடவடிக்கைகள், அது சம்பந்தப்பட்ட கோப்புக்களின் அலுவல்கள் மற்றும் திணைக்களத்தின் திட்டமிடல் பணிகள் என்பவற்றை இப்பிரிவு நிறைவேற்றுகின்றது. சம்பளம், கடன் செலுத்துகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல், திணைக்களத்தின் வருடாந்த கணக்குகளைத் தாயரித்தல், மதிப்பீடுகளைத் தயாரித்தல், பெறுகைப் நடவடிக்கை, நிதிநிலை அறிக்கைகளை அமைச்சுக்கும் திறைசேரிக்கும் அனுப்புதல் போன்ற திணைக்களத்துக்குரிய அனைத்து கணக்கீட்டு நடவடிக்கைகளும் நடைபெறுகின்றது.

1.5.12 கணனிப் பிரிவு

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் கணனிப் பிரிவு திணைக்களத்தின் இணையத்தளம், மென்பொருள்களை இற்றைப்படுத்தல் கணனி, வலையமைப்பை பராமரித்தல், சுவடிகள் முகாமைத்துவத்திற்காக அவசியப்படும் மென்பொருட்களை

மேம்படுத்தும் நடவடிக்கை மற்றும் தினசரி திணைக்களத்தின் கணனி சார்ந்து எழும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதனையும் மேற்கொள்கின்றது.

1.5.13 கண்டி கிளை

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் கண்டிக் கிளை ஹேமமாலி மாவத்தையின் பழைய நீதிமன்றக் கட்டிடத்தின் தளதா மாளிகையின் வளாகத்துடன் இணைந்த அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ளது. கிளை அலுவலகத்தில் உதவிச் சுவடிகள் காப்பாளர், சுவடிகள் காப்பாளர் உத்தியோகத்தர், மூன்று அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்கள் மூவரும் மீளாய்வுக்கு உட்படும் ஆண்டினுள் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள். கண்டிக் கிளையின் நீதிமன்ற ஆணைக்குழு அறிக்கை *(1815–1833)*, மலையக ஆணையாளர் குழுக் கூட்டங்களின் அறிக்கை *(1815–1833)*, கண்டி கச்சேரி ஆவணம் *(1821–1970)*, குருணாகல் கச்சேரி ஆவணம் *(1834–1949)*, கேகாலை கச்சேரி ஆவணம் *(1833–1952)*, மாத்தளை கச்சேரி ஆவணம் *(1891–1971)*, கண்டி, மாத்தளை, கேகாலை, குருணாகல். மரபியல் ஆவணம் *(1870–1872)* மற்றும் பன்சல் காணி ஆவணம் *(1854–1870)* பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு

2.1 விசேட திட்டங்கள் மற்றும் அடைவுகள்

கொள்கைசார் மற்றும் சட்ட திருத்த நடவடிக்கைகள்

2.1.1 1885 ஆம் ஆண்டிலிருந்து இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சட்டரீதியான வைப்புக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வெளியீடுகளுக்கான சட்டத்திற்கு புதிய தற்கால தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையிலான சட்டத்தை தேசிய நூலகம் மற்றும் அதனுடன் இணைந்து வரைவிடல் செய்யப்பட்டுள்ளது. இதற்காக தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம், தேசிய நூலகத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. டப். சுனில் மற்றும் தேசிய நூலகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் திரு. உபாலி அமரசிரி ஆகியோரை உள்ளடக்கிய துணைக்குழு தேசிய நூலக ஆலோசனைக் குழுவினால் நியமிக்கப்பட்டது. அக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைவுக்கு உரித்தான நிறுவனத்துடன் கலந்துரையாடியதன் பின்னர் தேசிய சுவடிகள் காப்பக ஆலோசனைச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தேசிய நூலக ஆலோசனைக் குழு மற்றும் தேசிய நூலகம் மற்றும் ஆவணமாக்கல் சேவைச் சபைக்கு அதனை சமர்ப்பித்ததுடன் தேசிய சுவடிகள் காப்பகத்திற்கு பொறுப்பாக உள்ள நிரல் அமைச்சுக்கு அதன் வரைவு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

2.1.2 1996 செப்டம்பர் மாதம் 6 ஆந் திகதியன்று சர்வதேச சுவடிகள் காப்பகக் கவுன்ஸிலின் (ICA) பொதுச் சபையின் 13 ஆவது அமர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணக் காப்பகர்களுக்கான நடத்தை நெறிமுறைக் கோவை, தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தினால் பின்பற்றப்படுவதற்காக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய சுவடிகள் காப்பகர் ஆலோசனைச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2.1.3 திணைக்களத் தலைவர்களினதும் ஆலோசனைச் சபையினதும் கருத்துப்படி திணைக்களத்தின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்றினை பின்வருமாறு திருத்தியமைப்பதற்கு அமைச்சினால் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

- தொலைநோக்கு

  தேசத்தின் அடையாளம், பொறுப்புடைமை மற்றும் ஞாபகச் சின்னங்களைப் பேணுகின்ற ஆவணப் பாரம்பரியத்தின் வினைத்திறனான முகாமைத்துவமும் பாதுகாப்பும்

- பணிக்கூற்று

  பொது நிறுவனங்களின் சான்றாவணங்களை முறையாக முகாமை செய்வதுடன் தேசத்தின் வரலாறு மற்றும் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் தனிப்பட்ட ஆவணங்களையும் பாதுகாத்தல்

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்

2.1.4 தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் கொழும்பில் அமைந்துள்ள தலைமைக் கட்டிடத்தில் பல வருடங்களாக மேற்கொள்ளப்படவிருந்த அவசர புனர்நிர்மாண மற்றும் நவீனமயப்படுத்தும் நடவடிக்கை உள்ளடங்கலாக நடுத்தர காற்றுப்பதனாக்கம், தீயணைப்பு மற்றும் உயர் பாதுகாப்பு அமைப்பை உருவாக்குவதற்கான திட்டம் *2018* திசெம்பர் மாதம் வரை அப்பணியின் *40%* அளவு நிறைவு செய்யப்பட்டுள்ளது. கிறிஸ்தவ தேவாலயங்களில் உயிர்த்த ஞாயிறுத் தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மற்றும் ஹோட்டல்களுக்கு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக அரசினால் விதிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் மற்றும் நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக நிர்மாணப் பணிகளில் குறிப்பிடத்தக்க அளவு பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன.

ஆவணக் காப்பீடு

2.1.5 தலைமைக் கட்டிடத்தின் நவீனமயப்படுத்தல் வேலை காரணமாக அதில் வைக்கப்பட்டுள்ள ஆவணங்களை அக்கட்டிடத்தின் விரிவாக்கமாக கொழும்பு அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள கட்டிடத்தின் களஞ்சியங்களில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஏறக்குறைய *22* கிலோமீற்றர் தூர அளவில் ஆவணங்களை சுத்தம் செய்து சரிபார்ப்புப் பட்டியலைத் *(Check List)* தயாரித்து, உக்கலடைந்த சுவடிகள் பெட்டிகளை அகற்றிவிட்டு, புதிய மேலுறைகள் பயன்படுத்தல் மற்றும் அமிலமற்ற பெட்டிகளில் அடைப்பதன் மூலம் ஆவணங்களின் நீண்ட ஆயுள் தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. *2019* ஆம் ஆண்டில் ஏறக்குறைய *07* கிலோமீற்றர் தூர அளவில் ஆவணங்கள் சுத்தம் செய்யப்பட்டு புதிய மேலுறைகள் பயன்படுத்தப்பட்டு பரீட்சிப்புப் பட்டியலைத் தயாரித்து புதிய இடத்துக்கு பாதுகாப்பாக நகர்த்தப்பட்டது. திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள சுவடிகளின் பாதுகாப்பு மற்றும் இரகசியத்தன்மையை பாதுகாப்பதற்கான தேவைப்பாட்டின் அடிப்படையில் சகல நடவடிக்கைகளும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினால் இரவு பகலாக நின்று சேவையாற்றி நிறைவு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு, திணைக்களத்தின் பிரிவுகளைப் புதிய கட்டிடத்தில் நிறுவுதல், கண்காட்சிப் பொருட்கள், ஓவியங்கள் மற்றும் சிற்பங்களை வேறு இடங்களுக்கு மாற்றுதல், புகைப்பிடிக்கும் வேலை, களஞ்சியசாலையில் உள்ள அலுமாரிகளை கழற்றி அகற்றுதல், தற்காலிக இராக்கைகளை பொருத்துதல் போன்ற நடவடிக்கைகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

2.1.6 தலைமைக் கட்டிடத்தில் வைக்கப்பட்டுள்ள ஆவணங்களை புதிய கட்டிடத்தில் வைப்புச் செய்வதற்கு முன்னர் சகல சுவடிகளையும் புகைப்பிடிப்பதற்கான தேவையின்

அடிப்படையில் தலைமைக் கட்டிடத்தில் வைக்கப்படவுள்ள சகல களஞ்சியசாலைகள் மற்றும் அறைகளுக்கு ஒரே தடவையில் புகைப்பிடிப்பதற்காக சாத்தியமான பதிலளிக்கும் கேள்வி மனுதாரர்களிடமிருந்து அப்பணியைச் செய்வதற்கான ஒப்பந்தக்காரர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன்படி, அப்புகைப்பிடிப்பு நடவடிக்கைக்காக திணைக்களத்தின் கொழும்பு அலுவலகம் 2019.04.06 ஆந் திகதி முதல் 2019.04.13 ஆந் திகதி வரை மூடப்பட்டுள்ளதோடு, 2019.05.03 ஆந் திகதி வரை சுவடிகளின் பயன்பாட்டினை கட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டது. அப்புகைபிடிப்பு நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர்கள் பங்களிப்புச் செய்தார்கள்.

2.1.7 ஒல்லாந்தர் காலத்தின் தோம்புகளைக் (விபரத் திரட்டு) கட்டுவதற்காக கலாநிதி அல்பெட் பன் டென் பெல்ட்இன் நிபுணத்துவ அறிவைப் பெற்றுகொள்வதற்கு ஆலோசனைச் சபையின் சிபாரிசு கிடைக்கப்பெற்றதோடு அமைச்சின் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொண்டதன் பின்னர் அவரினால் அந்நடவடிக்கை துவங்கப்பட்டு 2020 பெப்ரவரி மாதம் நிறைவு செய்யப்படவுள்ளது. கலாநிதி பன் டென் பெல்ட் இனால் 2013 ஆம் ஆண்டு நெதர்லாந்து தேசிய சுவடிகள் காப்பகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட பரஸ்பர கலாசார மரபுரிமைகள் (Mutual Cultural Heritage) திட்டத்தின் மூலம் அனுசரணை வழங்கிய திட்டத்தின் கீழ் கொழும்பு மாகாணத்தின் தோம்புகளில் கழன்று இருந்த பக்களுக்குரிய தொகுதிகள் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால், அப்பக்கங்களை உரிய தொகுதிகளில் கட்டுவதற்கான நடவடிக்கை ஊழியர் பற்றாக்குறை காரணமாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, 2019 ஆம் ஆண்டில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 14 சுவடிகள் மற்றும் புத்தக கட்டுநர்களினால் தோம்புகள் மீளக் கட்டும் செயற்பாட்டினை அவரின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்வதற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. இப்பணி அவரினால் நவம்பர் மாதம் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தருடன் (சுவடிகள்) வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், திசெம்பர் மாதம் அப்போதிருந்த நிரல் அமைச்சின் செயலாளரின் அறிவித்தலின் படி அவரின் சேவையை இடைநிறுத்த வேண்டி ஏற்பட்டது.

2.1.8 தேசத்தின் எழுத்தாவண மரபுரிமைகளை எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாத்து வழங்கும் பொருட்டு சுவடிகள் 02 தொகுதிகளை காப்பகப்படுத்தல், 85 நூலகப் புத்தகங்களை கட்டுதல், 314 பத்திரிகைகளைக் கட்டுதால் மற்றும் 54 வர்த்தமானிகளைப் காப்பகப்படுத்தும் செயற்படும் இடம்பெற்றது. அத்தோடு, நாட்டில் உள்ள வழிபாட்டுத் தளங்களில் முக்கியமான ஆவணங்கள் ஏராளமாகக் காணப்படுவதனால், அப்பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்காக 03 வழிபாட்டுத் தளங்களில் ஆவணக் கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு அச்சிடப்பட்ட புத்தகங்களைப் பாதுகாத்தல் மற்றும் 24,350 ஓலைச் சுவடிகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் நடவடிக்கைகள்

2.1.9 சுவடிகள் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள வரைபடங்களின் தொகுப்பை எண்வரிசைப்படுத்தல் (digitization) மற்றும் வெளியிடுவதற்கான திட்டத்தின் கீழ் ஆண்டு

நிறைவடையும் போது 2002 வரைபடங்கள் மற்றும் ஏனைய பொது மக்களின் கோரிக்கைகளின் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட 3191 பக்கங்களும் எண்வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

2.1.10 சுவடிகள் கூடத்தில் வைக்கப்பட்டுள்ள சூசிகளை கணனிமயப்படுத்தல் மற்றும் அவற்றுக்கான தரவுத் தளத்தினை (Data Base) தயாரித்தல் போன்ற திட்டத்தின் கீழ் ஆவண வகுதி 1 முதல் 685 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட வகுதிகளின் சூசிகை 396,777 இனை கணனிமயப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு அவற்றினைப் பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் சரிசெய்தல் ஆவண வகுதி 1 முதல் 603 வரை நிறைவு செய்யப்பட்டுள்ளது. மேலும், புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளைப் பதிவு செய்யும் பிரிவின் பெயர் பட்டியல் வரிசை 59,165 இனை Excel விரிதாளில் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளது.

2.1.11 தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சுவடிகள் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள திரைப்படங்களின் தொகுப்பை (376 திரைப்படங்கள்) பாதுகாத்தல் மற்றும் காப்பகப்படுத்தலுக்காக அத்தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 237 திரைப்படங்களை (எண்வரிசைப்படுத்தல் செய்ய முடியுமான திரைப்படங்களின் மூலப் பிரதிகள்) எண்வரிசைப்படுத்தப்பட்டு புலூ ரே தட்டுக்களில் பிரதி பண்ணப்பட்டுள்ளது. அத்தோடு 227 திரைப்படங்களை சர்வர் கணனியில் (NAS) உள்ளீடு செய்து, அவ்வாறே 237 திரைப்படங்கள்மெட்டா தரவுகள் (Metadata) கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன.

ஆலோசனைச் சபை

2.1.12 இறுதியாக 2015 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய சுவடிகள் காப்பக ஆலோசனைச் சபை 2019 ஆம் ஆண்டில் மீண்டும் செயற்படுத்தப்பட்டு வெற்றிகரமாக 04 கூட்டங்களை நடாத்தி சுவடிகள் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. தேசிய சுவடிகள் காப்பகச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் மூன்று வருட காலத்திற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிபுணர்கள் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்-

- திரு. ஜீ. பி. எஸ். எச். தி சில்வா அவர்கள், முன்னாள் பணிப்பாளர், தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம்
- பேராசிரியர் கே. என். ஓ. தர்மதாஸ அவர்கள், கௌரவ பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்
- பேராசிரியர் ரொஹான சமரஜீவ அவர்கள், தலைவர், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம்
- பேராசிரியர் கே. எம் தி சில்வா அவர்கள், கௌரவ பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்

- திரு. ஆர். எஸ். ஜயரத்ன அவர்கள், முன்னாள் அமைச்சின் செயலாளர்
- திரு. எஸ். எம். பந்துசீல அவர்கள், ஆவண வல்லுநர்

அதற்கு மேலதிகமாக, ஆலோசனைச் சபையின் தலைவராக தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நதீரா ரூபசிங்ஹ மற்றும் சபையின் செயலாளராக தேசிய சுவடிகள் கூட உதவி பணிப்பாளர், (அ. பொ.) திருமதி. ஷமிலா பிரியங்கனி அவர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

2.1.13 தேசிய சுவடிகள் காப்பகச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய சுவடிகள் காப்பக ஆலோசனைச் சபை மற்றும் தேசிய சுவடிகள் கூட விடயப் பொறுப்பு அமைச்சருக்கும் ஆலோசனை வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதால் 2019 ஆம் ஆண்டின சபை நடவடிக்கைகளின் சுருக்கம் மற்றும் எதிர்காலப் போக்குகள் தொடர்பிலான பரிந்துரைகளை உள்ளடக்கிய அறிக்கை புத்தசாசனம், கலாசாரம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சரான மஹிந்த ராஜபக்ஷவிடம் வழங்கப்பட்டுள்ளது. (தயவுடன் இணைப்பு 02 இனைப் பார்க்கவும்)

ஆராய்ச்சி சேவையை விஸ்தரித்தல்

2.1.14 2009 ஆம் ஆண்டுடன் நிறைவடைந்த இலங்கையில் நடைபெற்ற யுத்தத்திற்கு முன்னரான சனிக்கிழமை தினத்திலே ஆராய்ச்சி அறை திறக்கப்பட்டதனைப் போன்றே அதனை மீளவும் திறந்து வைப்பதற்கான இயலுமை பற்றி ஆலோசனைச் சபையின் ஆறிவுரையின் பேரில் திணைக்களத்தினால் கவனத்திற் கொள்ளப்பட்டதோடு, அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பிற்பாடு 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அது செயற்பாட்டு நிலைக்கு கொண்டுவரப்பட்டது.

ஆட்சேர்ப்பும் பதவியுயர்வும்

2.1.15 கிட்டத்தட்ட 10 வருட காலம் வெற்றிடமாக நிலவுகின்ற திணைக்கள ரீதியான உதவிப் பணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு 2019 செப்டம்பர் மாதம் 20 ஆந் திகதி இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் திறமை அடிப்படையிலான நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதோடு, திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த உதவி சுவடிகள் காப்பக உத்தியோகத்தர்கள் 06 பேர் இதற்காக கலந்து கொண்டார்கள். அதன்போது உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்ட புள்ளி விபரப்பட்டியல் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, திணைக்கள ரீதியான பதவியொன்றாக பிரதான காப்பக உத்தியோகத்தர் (சுவடிகள்) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 2019 ஜூன் மாதம் 19 ஆந் திகதி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதோடு அதற்காக திணைக்களத்தின் சுவடிகள் காப்பகப் பதவியில் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் 04 பேரும் கலந்து கொண்டார்கள்.

2.1.16 திணைக்கள ரீதியான மற்றும் இணைந்த சேவையின் ஆரம்ப நிலை மட்டத்தின் 39 பதவிகளுக்காக புதிய நியமனங்களை வழங்குவதற்கு முடியுமாக இருந்தது. இதுவானது இவ்வருடத்தின் ஆட்சேர்ப்பு தொடர்பில் திணைக்களம் அடைந்துள்ள வெற்றியாகும்.

அப்பதவிகளிடையே பல வருடங்களாக வெற்றிடமாக நிலவிய திணைக்கள ரீதியான பதவியொன்றாக காணப்படும் சுவடிகள் மற்றும் புத்தக கட்டுநர் பதவிகளுக்காக 15 பேருக்கு நியமனம் வழங்க முடியுமாக இருந்ததை விசேடமாக குறிப்பிடுதல் வேண்டும்.

தொடரிலக்கம்	பதவி	அளவு
i	காப்பக மற்றும் புத்தகம் கட்டுநர் - III ஆந் தரம்	15
ii	காப்பக மீள்பதிப்பு உதவியாளர் - III ஆந் தரம்	01
iii	தங்க எழுத்து அச்சகர் - III ஆந் தரம்	01
iv	காப்பக உதவியாளர் - III ஆந் தரம்	10
v	அலுவலக உதவியாளர் - III ஆந் தரம்	12

ஆவணங்களை இணைப்புச் செய்தல்

2.1.17 தேசிய மரபுரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பினை முன்னிட்டு அரச ஆவணங்களை இணைப்புச் செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் நீதிமன்றங்களின் சுவடிகள் காப்பகச் சட்டத்தின் 9(2) ஆம் பந்தியின் கீழ் அரச ஆவணங்களும், 12 ஆம் பிரிவின் கீழ் தனிப்பட்ட ஆவணங்களும், 13(1) ஆம் பந்தியின் கீழ் வெளியீடுகளும் தேசிய சுவடிகள் கூடத்தினால் இணைப்புச் செய்யப்படுகின்றன. அதன்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 3,149 சுவடிகள் இவ்வாண்டினுள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு இணைப்புச் செய்யப்பட்டுள்ளன.

அரச ஆவணம் (9 (2) ஆம் பிரிவின் கீழ்)

ஆவண வகுதி	**நிறுவனம்**	**ஆவணங்களின் அளவு**
76	கொழும்பு மாநகர சபை	22

தனிப்பட்ட ஆவணம் (12 ஆம் பிரிவின் கீழ்)

ஆவண வகுதி	**நிறுவனம்**	**ஆவணங்களின் அளவு**
25.358	சமூக நினைவூட்டல் திட்டம்	204
25.320	C. G. R. புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் குழு	01
25.348	கண்டி அசரண சரணச் சங்கம்	02
25.345	அதிவணக்கத்துக்குரிய நாஉயனே ஆரியதம்ம தேரர்களின் தொகுப்பு	01

அரச வெளியீடுகள் (13 (1) ஆம் பந்தியின் கீழ்)

ஆவண வகுதி / வகுதிகள்	நிறுவனம்	ஆவணங்களின் அளவு
108	சனாதிபதி செயலகம்	101
182	இலங்கை பாராளுமன்றம்	361
அமைச்சுக்கள்		
82	உள்நாட்டலுவல்கள் அமைச்சு	02
253	விவசாய மற்றும் கமநல சேவை அமைச்சு	02
257	பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு	01
283	மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு	02
382	துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு	01
394	போக்குவரத்து அமைச்சு	04
539	சூழல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு	02
542	மஹாவலி மற்றும் ஆற்று பள்ளத்தாக்குகள் மற்றும் ரஜரட்ட அபிவிருத்தி அமைச்சு	02
719	தென் மாகாண விவசாய மற்றும் கமநல சேவை அமைச்சு	03
திணைக்களங்கள்		
69	காணி ஆணையாளர் திணைக்களம்	01
73	கலாசார அலுவல்கள் திணைக்களம்	36
83	பொலிஸ் உத்தியோகத்தர் திணைக்களம்	87
91	கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்	01
101	தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்	18
107	நில அளவைத் திணைக்களம்	78
158	உணவு ஆணையாளர் திணைக்களம்	01
176	தேர்தல்கள் திணைக்களம்	04
250	சிறைச்சாலைகள் ஆணையாளர் திணைக்களம்	02
275	தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம்	05
352	அரச அச்சுத் திணைக்களம்	1982
470	அரச நிதிக் கொள்கை திணைக்களம்	03
484	விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்	01
624	சிவில் பாதுகாப்புத் திணைக்களம்	01
706	நீர்ப்பாசனத் திணைக்களம் - தென் மாகாணம்	03
713	விவசாயத் திணைக்களம் - தென் மாகாணம்	04
716	காணி மற்றும் கொள்கைத் திட்டமிடற் திணைக்களம்	01

பிரதேச செயலகங்கள்		
282	கம்பஹ பிரதேச செயலகம்	02
மாநகர சபைகள்		
676	மொரட்டுவ மாநகர சபை	01
நகர சபைகள்		
683	சீதாவகபுர நகர சபை	01
மாகாண சபைகள்		
351	மேல் மாகாண சபை	30
376	மேல் மாகாண பிரதம செயலகம்	06
409	தென் மாகாண சபை	11
பிரதேச செயலகங்கள்		
415	கொடபொல பிரதேச செயலகம்	01
710	கம்பஹ பிரதேச செயலகம்	01
712	ரபுக்கனபிரதேச செயலகம்	07
பல்கலைக்கழகங்கள்		
89.2	பேராதனைப் பல்கலைக்கழகம்	03
89.4	களணி பல்கலைக்கழகம்	03
89.5	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	11
89.6	மொரட்டுவ பல்கலைக்கழகம்	02
89.9	ருஹுணு பல்கலைக்கழகம்	01
89.13	சப்ரகமுவ பல்கலைக்கழகம்	01
அதிகார சபைகள்		
104	அணுசக்தி அதிகார சபை	03
285	மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை	11
559	இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை	03
கூட்டுத்தாபனங்கள்		
125	இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்	01
சபைகள்		
95	தேசிய நூலகம் மற்றும் ஆவணமாக்கல் சேவை சபை	01
ஆணையங்கள் மற்றும் ஆணைக்குழு		
252	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	01
407	அரசாங்க சேவை ஆணைக்குழு	03
551	தேசிய பொலிஸ் உத்தியோகத்தர் ஆணையம்	03
608	மூன்றாம் நிலை மட்டம் மற்றும் தொழில்சார் கல்வி ஆணையம்	01
649	யுனெஸ்கோ இலங்கை தேசிய ஆணைக்குழு	02

657	பொது பயன்பாட்டு ஆணைக்குழு	01
நிதியங்கள்		
280	மத்திய கலாச்சார நிதியம்	55
சங்கங்கள் / ஒன்றியங்கள்		
595	அவுஸ்திரேலியாவின் இலங்கைச் சங்கம்	03
733	கண்டி தருண பௌத்த ஒன்றியம்	06
715	அரச ஊழியர்களின் நலன்புரிச் சங்கம்	02
பணியகங்கள்		
309	முத்திரைப் பணியகம்	16
707	தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் பணியகம்	03
709	பொலிஸ் போதைப்பொருள் பணியகம்	01
வேறு நிறுவனங்கள்		
157	ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனம்	04
192	இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்	02
217	இலங்கை மன்றம்	01
312	தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்	01
389	சார்க் அமைப்பு	03
475	தேசிய நீர் வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முகவர் நிறுவனம்	02

இரகசிய ஆவணப் பிரிவின் மூலம் பின்வருமாறு இவ்வருடத்தினுள் ஆவணங்களை இணைப்புச் செய்துள்ளார்கள்.

ஆவண வகுதி	**நிறுவனம் / ஆணையம் / குழு**	**ஆவணங்களின் அளவு**
302	அமைச்சரவை அலுவலகம்	1665
--	வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் எயார்லயின்ஸ் நிறுவனம், வரையறுக்கப்பட்ஸ்ரீ லங்கன் கேடரின் நிறுவம் மற்றும் வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) நிறுவனத்திற்கான சனாதிபதி ஆராய்ச்சி ஆணையம்	1830
--	2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆந் திகதி நாட்டின் பல பகுதிகளில் தொடர் குண்டுவெடிப்புகள் குறித்து விசாரணை செய்து அறிக்கை அளிப்பதற்காக நியமனம் செய்யப்பட்ட விசேட விசாரணை குழு	35

2.2 எதிர்கால இலக்குகள்

2.2.1 வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரிதப்படுத்தல். 2019 சனவரி மாதம் தொடக்கம் வெற்றிடங்களாக நிலவுகின்ற 121 பதவிகளுக்கான திணைக்கள ரீதியான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கான முகாமைத்துவ சேவை இலக்கம் 03/2018 இனையுடைய சுற்றறிக்கையின் கீழ் முகாமைத்துவ சேவை திணைக்களத்திடம் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தும், 2019 ஆம் ஆண்டிலே அதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது அது அவ் வருடத்தினுள் 20% இனை அதாவது 24 பதவிகளுக்கு மாத்திரம் ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றது. அதற்கமைய, எஞ்சிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர், சுவடிகள் காப்பக உத்தியோகத்தர்கள் 45 பேரும், சுவடிகள் பாதுகாப்பாளர் 22 பேரும், சுவடிகள் மீள்பதிப்பாளர்கள் 06 பேரும், கட்புல செவிப்புல சுவடிகள் பாதுகாப்பாளர்கள் 07 பேரும், திரைப்பட பாதுகாப்பாளர்கள் 04 பேரும், பெயர்ப் பட்டியலிடல் உத்தியோகத்தர்கள் 09 பேரும் மற்றும் அச்சக ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் 08 பேரும் ஆட்சேர்க்கப்படவுள்ளார்கள்.

2.2.2 அறிவுடன் கூடிய சமூகத்தை உருவாக்கும் வகையில் தகவல்களுக்கு பிரவேசிக்கும் வசதி வாய்ப்புக்களை வழங்குவதற்காக திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமான தகவல்களை பதிவிறக்கம் செய்வதற்கு முடியுமான வகையில் இணையத்தளத்தை நவீனமயப்படுத்தல்.

2.2.3 கலாச்சார மரபுரிமைகளை நிரந்தரமாக பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கும் வகையில் பிரதான கட்டிடத்தின் புனர்நிர்மாணப் பணிகளான நடுத்தர காற்றுப்பதனாக்கம், தீயணைப்பு மற்றும் உயர் பாதுகாப்பு முறைமைகளை நிறுவும் திட்டம் மற்றும் அதனுடன் இணைந்து அக்கட்டிடத்தின் இடவசதியை அதிகபட்சப் பயன்பாட்டில் கொள்வதற்காக நகர்த்தும் இராக்கை முறையை உருவாக்குதல்.

